பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**03 02 2026** **7 15**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்திய பொருட்கள் மீதான வரியை அமெரிக்கா குறைத்துள்ளதன் மூலம் இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தகம் மேலும் வளர்ச்சியடையும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

2. மேற்குவங்கத்தில் நடைபெறும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்பாக அம்மாநில முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளை தேர்தல் ஆணையம் நிராகரித்துள்ளது.

3. நடப்பு ரபி பருவத்தில் நாடு முழுவதும் இதுவரை **676** லட்சம் ஹெக்டேர் அளவிற்கு சாகுபடி செய்யப்பட்டுள்ளதாக வேளாண் அமைச்சகம் கூறியுள்ளது.

4. சூதாட்டம் நடத்தி மோசடி செய்து சீன நாட்டவர்கள் **6** பேரின் உயிரிழப்புக்கு காரணமான மியான்மரை சேர்ந்த **4** பேருக்கு சீனா மரண தண்டனையை நிறைவேற்றியது.

5. மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள எலிமினேட்டர் சுற்றில் தில்லி அணி - குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரியை அமெரிக்கா 18 சதவீதமாக குறைத்துள்ளது.

இது தொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடி அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்புடன் தொலைபேசி வாயிலாக உரையாடியதை அடுத்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, இரண்டு மிகப்பெரிய பொருளாதார நாடுகள் ஒருங்கிணைந்து செயல்படும்போது அது மக்களுக்கு பயனளிக்கும் என்றும், இருதரப்பு ஒத்துழைப்புக்கான பல்வேறு வாய்ப்புகளை உருவாக்கும் என்றும் **தெரிவித்துள்ளார்.**

அமெரிக்காவின் இந்த அறிவிப்புக்காக இந்தியாவின் 140 கோடி மக்களின் சார்பாக அந்நாட்டு அதிபர் திரு. ட்ரம்புக்கு தாம் நன்றி தெரிவிப்பதாக **கூறியுள்ளார்.**

அதிபர் ட்ரம்ப்பின் தலைமைத்துவம், உலகளாவிய அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் செழுமைக்கு இன்றியமையாதது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைதிக்கான அவரது முயற்சிக்கு இந்தியா முழு ஆதரவு அளிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையேயான கூட்டாண்மையை மேலும் முன்னெடுத்துச் செல்ல அதிபர் திரு. ட்ரம்ப்புடன் மேலும் இணைந்து செயல்படுவதை தாம் எதிர்நோக்கி இருப்பதாக திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 18 சதவீதமாக வரி குறைக்கப்பட்டுள்ள நிலையில் இது இந்தியா - அமெரிக்கா இடையேயான உறவை வலுப்படுத்த வழிவகுக்கும் என்று மத்திய **உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.**

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இதன் மூலம் இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தகம் மேலும் வளர்ச்சி அடையும் என்று அவர் **கூறியுள்ளார்.**

வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள பதிவில், இரு நாடுகளுக்கு இடையேயான புதிய வர்த்தக அறிவிப்பால் கூடுதல் வேலைவாய்ப்பை உருவாக்கும் என்றும், இரு நாட்டு

பொருளாதாரங்களில் புதுமைக் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தியாவில் உற்பத்தி செய்வோம் திட்டத்திற்கு இது வலுசேர்க்கும் என்றும் திரு. ஜெய்சங்கர் **குறிப்பிட்டுள்ளார்.**

அமெரிக்காவுக்கான இந்திய தூதர் திரு. வினய் மோகன் குவாத்ரா வெளியிட்டுள்ள பதிவில், இந்தப் புதிய வர்த்தக பேச்சுகள் இரு நாட்டு பொருளாதாரத்திற்கும், மக்களுக்கும் புதிய வாய்ப்புகளை உருவாக்கும் என்றும் கூறியுள்ளார்.

<<<<>>>>

வரும் நிதியாண்டுக்கான பட்ஜெட் நாட்டின் விமானப் போக்குவரத்து துறையின் சுயசார்புக்கு ஆதரவளிக்கும் வகையில் உள்ளதாக அந்த அமைச்சகம் பாராட்டு தெரிவித்துள்ளது.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் விமான உதிரி பாகங்கள் மீதான சுங்க வரி விலக்கு உள்நாட்டு விமான உதிரி பாகங்கள் உற்பத்தி துறைக்கு ஊக்கமளிக்கும் என்று கூறியுள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசிய விமானப் போக்குவரத்து அமைச்சக செயலாளர் திரு. சமீர் சின்ஹா, பராமரிப்பு, பழுதுபார்ப்பு உபகரணங்கள் மீதான சுங்க வரி விலக்கு 2028ஆம்

ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளதன் மூலம் உலகளாவிய விமான பராமரிப்பு மையமாக இந்தியா திகழச் செய்வதற்கு வலுப்படுத்தும் என்று தெரிவித்தார்.

<<<<>>>>

நடப்பு ரபி பருவத்தில் நாடு முழுவதும் இதுவரை **676** லட்சம் ஹெக்டேர் பரப்பளவுக்கு சாகுபடி செய்யப்பட்டுள்ளதாக வேளாண் அமைச்சகம் கூறியுள்ளது.

இதுகுறித்து அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், **335** லட்சம் ஹெக்டேர் பரப்பளவுக்கு கோதுமையும், **45** லட்சம் ஹெக்டேர் பரப்பளவுக்கு நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

தானிய வகைகளின் சாகுபடி **139** லட்சம் ஹெக்டேர் அளவிற்கும் எண்ணெய்வித்துக்கள் **97** லட்சம் ஹெக்டேர் அளவிற்கும் சாகுபடி செய்யப்பட்டுள்ளதாக வேளாண் அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

மேற்குவங்கத்தில் நடைபெறும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்பாக அம்மாநில முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளை தேர்தல் ஆணையம் நிராகரித்துள்ளது.

அம்மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் தொடர்பாக முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி சந்தித்து கேள்வி எழுப்பியபோது, தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார் மற்றும் இரண்டு தேர்தல் ஆணையர்கள் அதை பொறுமையுடன் கேட்டதாகவும், எனினும் செல்வி மம்தா பானர்ஜி தவறான குற்றச்சாட்டுகளை கூறியுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அவருடைய கேள்விகளுக்கு உரிய பதில் அளிக்கப்பட்டதாகவும், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்பாக எவரேனும் தன்னிச்சையாக செயல்பட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதற்கிடையே தேர்தல் ஆணையர்கள் உடனான பேச்சுகளுக்குப் பிறகு புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய செல்வி மம்தா பானர்ஜி மேற்குவங்க மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின்போது 58 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அந்த வாக்காளர்களுக்கு பட்டியலில் மீண்டும் பெயர் சேர்ப்பதற்கான உரிய வாய்ப்பு வழங்கப்படவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

மேற்குவங்க மாநிலத்தில் முறையான திட்டமிடுதலுடன் இப்பணி நடைபெறவில்லை என்றும் செல்வி மம்தா பானர்ஜி கூறினார்.

<<<<>>>>

சூதாட்டம் நடத்தி மோசடி செய்து சீன நாட்டவர்கள் 6 பேரின் உயிரிழப்புக்கு காரணமான மியான்மரை சேர்ந்த 4 பேருக்கு சீனா மரண தண்டனையை நிறைவேற்றியது.

அவர்கள் நான்கு பில்லியன் டாலருக்கும் மேலான அளவில் சூதாட்டம் நடத்தி மோசடி செய்ததாக சீன நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் நடைபெற்ற 11ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 83 புள்ளி இரண்டு ஏழு சதவீத மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தேர்வெழுதிய 81 ஆயிரத்து 573 மாணவர்களில் 67 ஆயிரத்து 932 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளதாக ஜம்மு-கஷ்மீர் பள்ளிக் கல்வி வாரியம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சேலம் ரயில்வே கோட்டம் நடப்பாண்டில் 612 கோடி ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளதாக ரயில்வே கோட்ட மேலாளர் திரு. பன்னாலால் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், இது முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தைவிட 5 புள்ளி 6 சதவீதம் அதிகம் என்று கூறினார்.

<<<<>>>>

உத்தரப்பிரதேச மாநிலத்தில் நாளை மறுநாள் வரை கடும் பனிமூட்டம் நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பிஹார், ஹரியானா, சண்டிகட், தில்லி, ஒடிசா, பஞ்சாப், ராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு பனிப்பொழிவு இருக்கக்கூடும் என்று தெரிவித்துள்ளது.

ஹிமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட், உத்தரப்பிரதேசத்தின் மேற்குப்பகுதி ஆகிய இடங்களில் நாளை வரை இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதற்கிடையே ஹிமாச்சலப்பிரதேசத்தில் நிலவும் பனி மற்றும் மழை பொழிவால் அம்மாநிலம் முழுவதும் கடும் குளிர் நிலவுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பனிப்பொழிவு காரணமாக 400க்கும் மேற்பட்ட சாலைகளின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு இடங்களில் மின் விநியோகமும் பாதிக்கப்பட்டுள்ளது.

சாலைப் போக்குவரத்தை சீரமைக்க கூடுதல் பணியாளர்களை அம்மாநில அரசு நியமித்துள்ளது.

லாஹவுல்-ஸ்பிட்டி மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இன்று பனிச்சரிவு ஏற்பட வாய்ப்புள்ளதாக மாவட்ட பேரிடர் மேலாண்மை எச்சரித்துள்ளது.

இதையடுத்து மக்கள் அத்தியாவசியமற்ற பயணத்தை தவிர்க்குமாறும், பாதுகாப்பான வழித்தடங்களைப் பயன்படுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள எலிமினேட்டர் சுற்றில் தில்லி அணி - குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

**Kotambi-**யில் நடைபெறும் இப்போட்டி இரவு மணி **7.30**க்கு தொடங்குகிறது.

---------------

உலகக்கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி பயிற்சி ஆட்டத்தில் இந்தியா ஏ அணி 38 ரன் வித்தியாசத்தில் அமெரிக்காவை வென்றது.

------------

ஆசிய பேட்மிண்டன் குழு சாம்பியன் போட்டி சீனாவில் இன்று தொடங்குகிறது.

ஆடவர் பிரிவில் இந்தியாவின் லக்ஷயா சென், ஹெச்.எஸ். பிரனாய், கே.ஸ்ரீகாந்த் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் ரங்கி ரெட்டி-சிராக் ஷெட்டி இணை பங்கேற்கிறது.

மகளிர் பிரிவில் தன்வீ ஷர்மா, உன்னதி ஹூடா, மால்விகா பன்சோட் இடம்பெற்றுள்ளனர்.

மகளிர் இரட்டையர் பிரிவில் த்ரிஷா ஜோலி-காயத்ரி கோபிசந்த் இணை இடம்பெற்றுள்ளது.

இந்திய மகளிர் அணி இடம்பெற்றுள்ள பிரிவில் தாய்லாந்து மியான்மர் அணிகள் பங்கேற்றுள்ளன.

இந்திய ஆடவர் அணி இடம்பெற்றுள்ள பிரிவில் ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் அணிகள் பங்கேற்றுள்ளன.

**<<<<The End>>>>**